Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/12.5.2025

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 12.5.2025 நேரம் மாலை 6.20 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று இரவு 8 மணிக்கு நாட்டு மக்களிடையே உரையாற்றுகிறார்.

ஆபரேஷன் சிந்தூர் பாகிஸ்தான் ராணுவத்தினருக்கு எதிரானது இல்லை என்று வான் தாக்குதல் நடவடிக்கைகளுக்கான தலைமை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2025-26-ஆம் கல்வியாண்டிற்கான நீட் அல்லாத, இளங்கலை படிப்புகளுக்கான விண்ணப்ப தேதியை சென்டாக் அறிவித்துள்ளது.

ரேஷன் கடைகளில் விரைவில் கோதுமை வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

*பிரதமர் கூட்டம்*

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. புதுடெல்லியில், பிரதமர்

இல்லத்தில் இன்று மதியம் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர். தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல், முப்படைகளின் தலைமை தளபதி ஜென்ரல் அனில் சவ்கான், முப்படைகளின் தளபதிகள் மற்றும் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்நிலையில் பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களிடையே இன்று இரவு 8 மணிக்கு உரை நிகழ்த்துவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

*பாதுகாப்பு துறை-விளக்கம்*

இந்தியாவால் மேற்கொள்ளப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைகள், தீவிரவாதிகளுக்கும், அவர்களுக்கு உதவியாக இருந்த கட்டமைப்புகளுக்கும் எதிரானதே தவிர, பாகிஸ்தான் ராணுவத்திற்கு எதிரானது அல்ல என்று வான் தாக்குதல் நடவடிக்கைகளுக்கான தலைமை இயக்குநர் ஏர்மார்ஷல் ஏ கே பார்தி தெரிவித்துள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைகள் குறித்து, ராணுவ நடவடிக்கைகளுக்கான தலைமை இயக்குநர், வான் தாக்குதல் நடவடிக்கைகளுக்கான தலைமை இயக்குநர், கப்பல் படை நடவடிக்கைகளுக்கான தலைமை இயக்குநர் உள்ளிட்டோர் இன்று டெல்லியில் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு........

(வாய்ஸ்)

ஆபரேஷன் சிந்தூர் குறித்து இன்று டெல்லியில் பத்திரிக்கையாளர்களுக்கு விளக்கமளித்த ஏர்மார்ஷல் பார்தி, பாகிஸ்தானின் பொது மக்களுக்கும், ராணுவ கட்டமைப்புகளுக்கும் சேதமில்லாமல் தாக்குதல் நடத்தப்பட்ட விதம் குறித்து எடுத்துரைத்தார். இந்திய ஆயுதப் படை, ராணுவம் மற்றும் கப்பல் படைகளை ஒருங்கிணைத்து, இந்திய வான் பாதுகாப்பு அமைப்புகள், செயல்பட்ட விதம் குறித்தும் எடுத்துரைத்தார். பாகிஸ்தான் தரப்பில் இருந்து தாக்குதல் முயற்சியில் ஈடுபட்ட பல்வேறு ட்ரோன் மற்றும் ஏவுகணைகள் வானிலேயே இந்திய விமானப்படையினரால் வழிமறித்து அழிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இந்திய வான்தளங்கள் மற்றும் தளவாட கட்டமைப்புகள் மீது இம்மாதம் 9 மற்றும் 10-ஆம் தேதி இரவுகளில், பாகிஸ்தான் விமானப்படை, மேற்கொண்ட அனைத்து தாக்குதல் முயற்சிகளும், வானிலேயே தடுக்கப்பட்டு முறியடிக்கப்பட்டதாக ராணுவ நடவடிக்கைகளுக்கான தலைமை இயக்குநர் லெப்டிணன்ட் ஜென்ரல் Rajiv Ghai செய்தியாளர்கள் சந்திப்பின் போது தெரிவித்தார். இந்திய வான்வெளியில் ஊடுறுவி தாக்குதல் நடத்தும் எந்தவிதமான வாய்ப்பும் பாகிஸ்தானுக்கு வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்த அவர், நமது எல்லைப் பாதுகாப்பு படை வீரர்களின் துணிச்சல் மிக்க ஒத்துழைப்பை

பாராட்டினார். கப்பல் படை நடவடிக்கைகளுக்கான தலைமை இயக்குநர் வைஸ் அட்மிரல் ஏ என் பிரமோத் செய்தியாளர் சந்திப்பில் பேசும் போது, கடல் சார் படையின் தொடர் கண்காணிப்பினால் வான்வழி உள்ளிட்ட அனைத்து தாக்குதலும் முறியடிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

*விமான நிலையங்கள்*

இந்தியா-பாகிஸ்தானுக்கு இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டுள்ளதால், 32 விமான நிலையங்களில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பொது மக்கள் போக்குவரத்திற்கான விமான சேவைகள், மீண்டும் துவங்கி உள்ளன. பயணிகள், தாங்கள் பயணம் செய்ய உள்ள விமானம் பற்றிய தகவல்களை, நேரடியாக சம்பந்தப்பட்ட விமான நிலையங்களை முன் கூட்டியே தொடர்பு கொண்டும், விமான நிலையங்களின் வெப்சைட்டுக்களை பார்த்தும் அறிந்து கொள்ளுமாறு இந்திய விமான நிலையங்களின் ஆணையம் தெரிவித்துள்ளது.

*புத்த பூர்ணிமா*

புத்த பூர்ணிமா இன்று உலகம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. கவுதம புத்தர் அவதரித்த நாள் புத்த பூர்ணிமாவாக கொண்டாடப்படுகிறது. மேலும் இந்நாள், புத்த கயாவில் உள்ள மகா போதி மரத்தின் கீழ் அவர் ஞானம் பெற்ற அல்லது நிர்வாண நிலை அடைந்த நாளாகவும் கருதப்படுகிறது. புத்த பூர்ணிமாவை முன்னிட்டு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர்

திரு ஜகதீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்டோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

*செவிலியர் தினம்*

செவிலியர்களின் நல்வாழ்வு, நாட்டின் சுகாதார அமைப்புகளின் வலிமை மற்றும் தேச வளர்ச்சியுடன் நேரடியான தொடர்பு கொண்டது என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜே பி நட்டா தெரிவித்துள்ளார். சமூக வலைதள பதிவு ஒன்றில், செவிலியர்களுக்கான முதலீடு மற்றும் செலவினங்கள், ஆரோக்கியமான சமூகம், வளமான சமுதாயம் மற்றும் சிறந்த எதிர்காலத்திற்கான முதலீடு என்று திரு நட்டா குறிப்பிட்டுள்ளார். செவிலியர்களின் அர்ப்பணிப்பு உணர்வு, இரக்க குணம் மற்றும் சக்திக்கு தாம் தலை வணங்குவதாக, குறிப்பிட்டுள்ளார். அடுத்தவர் நலனுக்காக தங்களது வாழ்வை அர்ப்பணிப்போரை, நாம் அனைவரும் பாதுகாத்து, அதிகாரமளித்து, மதிக்க வேண்டுமென்று திரு நட்டா கேட்டுக் கொண்டுள்ளார்.

*சென்டாக்*

2025-26-ஆம் கல்வியாண்டிற்கான நீட் அல்லாத, இளங்கலை படிப்புகளுக்கான விண்ணப்ப தேதியை சென்டாக் அறிவித்துள்ளது.

கலை, அறிவியல், மற்றும் வணிகவியல், படிப்புகளான பி.ஏ, பிஎஸ்ஸி, பி.காம், பிபிஏ, உள்ளிட்ட படிப்புகளுக்கும், தொழில் முறை படிப்புகளான பி.டெக், பி.ஆர்க், பிஎஸ்இ-ஹானர்ஸ், மற்றும் வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை அறிவியல் உள்ளிட்ட

படிப்புகளிலும், B.P.A., B.V.A., உள்ளிட்ட நுண்கலை படிப்புகளிலும் சேர விரும்பும் மாணவர்கள் இன்று முதல் இம்மாதம் 31-ஆம் தேதி வரை சென்டாக் இணைய தளத்தில் ஆன்-லைன் முறையில் விண்ணப்பிக்கலாம் என்று சென்டாக் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு............

(வாய்ஸ்)

புதுச்சேரி அரசின் உயர் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரி இயக்குநரகத்தின் ஒருங்கிணைந்த சேர்கை குழு, சென்டாக், 2025-26-ஆம் கல்வி ஆண்டிற்கான நீட் அல்லாத கலை, அறிவியல், வணிகவியல், நுண்கலை மற்றும் தொழில் முறை படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள், www.centacpuducherry.in என்ற இணையதளத்தில் இன்று முதல் வரும் 31-ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று அறிவித்துள்ளது. நீட் அல்லாத 6 ஆயிரத்து 257 தொழிற்கல்வி இடங்களும், கலை-அறிவியல் துறையில் 4 ஆயிரத்து 320 இடங்கள் என மொத்தம் 10 ஆயிரத்து 577 இடங்கள் உள்ளதாகவும் சென்டாக் அறிவித்துள்ளது.

முன்னதாக நீட் அல்லாத இளங்கலை படிப்புகளுக்கான தகவல் கையேட்டினை முதலமைச்சர் திரு ரங்கசாமி, புதுச்சேரி சட்டப்பேரவையில் இன்று வெளியிட்டார். கல்வித் துறை செயலர் திருமதி பிரியதர்ஷிணி, சென்டாக் ஒருங்கிணைப்பாளர் திரு அமன் சர்மா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

*ரங்கசாமி*

ரேஷன் கடைகளில் விரைவில் கோதுமை வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி சட்டப்பேரவையில் சென்டாக் கையேட்டினை முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று வெளியிட்டார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் அண்மையில் புதுச்சேரிக்கு வருகை தந்த மத்திய தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் இளைஞர் நல அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியாவிடம், புதுச்சேரிக்குத் தேவையான நிதி உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாகவும், அறிவித்த திட்டங்கள் அனைத்தையும் செயல்படுத்தும் அரசாக தேசிய ஜனநாயக கூட்டணி அரசு உள்ளதாகவும் தெரிவித்தார். ரேஷன் கடைகளில் தற்போது மாதந்தோறும் இலவச அரிசி வழங்கப்பட்டு வருவதாகவும், விரைவில் கோதுமை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். மாநில அந்தஸ்து தொடர்பான கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த திரு ரங்கசாமி, புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து தொடர்பான தீர்மானம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, மாநில அந்தஸ்து கிடைக்க வலியுறுத்துவோம் என கூறினார்.

*காரைக்கால்*

காரைக்கால் திருநள்ளாறில் உள்ள ஸ்ரீ தர்பாரண்யேஸ்வரர் கோவில் பிரமோற்சவ விழாவை முன்னிட்டு, தேர்கால முகூர்த்த பூஜை நேற்று நடைபெற்றது. பூஜையில் சிவாச்சார்யார்கள் கோவிலின் தேர்கள்

மற்றும் கொடி மரத்திற்கு பல்வேறு வகையான வாசனை திரவியங்கள் மற்றும் புனித நீரால் அபிஷேகம் செய்தனர். இந்நிகழ்ச்சியில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு சோமசேகர அப்பாராவ், கோவில் நிர்வாகிகள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

*மதுரை*

சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் இன்று மதுரையில் விமர்சையாக நடைபெற்றது. பச்சை பட்டுடுத்தி, தங்க குதிரை வாகனத்தில் கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கிய போது அங்கே கூடி இருந்த ஆயிர கணக்கான மக்கள் கோவிந்தா, கோவிந்தா என கோஷமிட்டு, கைகளில் சர்க்கரை தீபம் ஏந்தி கள்ளழகரை வரவேற்றனர். சித்திரை திருவிழாவை முன்னிட்டு மதுரையின் பல்வேறு இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் நிறுவப்பட்டு, பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டு இருந்தன.

*விராட் கோலி*

இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோலி சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து தமது ஓய்வை அறிவித்துள்ளார். சமூக ஊடக பதிவு ஒன்றில் இதனை பதிவிட்டுள்ள விராட் கோலி, சுமார் 14 ஆண்டுகள் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி உள்ளார். 123 போட்டிகளில் பங்கேற்றுள்ள அவர் 9 ஆயிரத்து 230 ரன் எடுத்துள்ளார். 68 டெஸ்ட் போட்டிகளை விராட் கோலி தலைமையில் எதிர்கொண்ட இந்திய அணி 40 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. 11 போட்டிகள் வெற்றி தோல்வி

ஏதுமின்றியும், 17 போட்டிகளில் தோல்வியும் கண்டுள்ளது. சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் விராட் கோலி தொடர்ந்து விளையாடுவார்.

*வானிலை*

தென்மேற்கு பருவமழை அந்தமான் கடல், அந்தமான் மற்றும் நிகோபார் தீவு, மற்றும் தெற்கு வங்க கடல் பகுதிகளில் நாளை துவங்க கூடும் என சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதுமேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுவை-காரைக்கால் பகுதிகளின் ஓரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்ட எல்லைப் பகுதிகள், மற்றும் ஈரோடு மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

*அசாம்*

அசாமில் நடைபெற்ற பஞ்சாயத்து தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வருகிறது. நேற்று காலை 8 மணிக்கு துவங்கிய வாக்கு எண்ணிக்கை இன்று மாலை வரை நடைபெறும் என எதிர்பார்க்கப் படுகிறது. தற்போதைய நிலவரப்படி, அனைத்து மாவட்டங்களிலும் பிஜேபி மற்றும் அதன் தோழமைக் கட்சிகள் முன்னிலையில் இருப்பதாக அசாம் மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

*சம்பித் பத்ரா (10)*

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் மூலம் இந்தியா உலக நாடுகளுக்கு தீர்க்கமான ஒரு செய்தியை வழங்கி உள்ளதாக, பிஜேபியின் செய்தி தொடர்பாளர் திரு சம்பித் பத்ரா கூறி உள்ளார். புதுடெல்லி கட்சி தலைமை அலுவலகத்தில் பத்திரிக்கையாளர்களைச் சந்தித்த அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி 20 நாடுகளின் தலைவர்களை நேரடியாக தொடர்பு கொண்டு தீவிரவாதத்திற்கு எதிராகவும் மற்றும் பாகிஸ்தானை தனிமைப் படுத்தவும் ஒருமித்த கருத்தை ஏற்படுத்தியதாக தெரிவித்தார். சவுதிஅரேபியா, ஐக்கிய அரபு அமீரகங்கள், அமெரிக்கா மற்றும் பல்வேறு இஸ்லாமிய நாடுகள், தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு ஆதரவு தெரிவித்ததாகவும் திரு சம்பித் பத்ரா தெரிவித்தார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று இரவு 8 மணிக்கு நாட்டு மக்களிடையே உரையாற்றுகிறார்.

ஆபரேஷன் சிந்தூர் பாகிஸ்தான் ராணுவத்தினருக்கு எதிரானது இல்லை என்று வான் தாக்குதல் நடவடிக்கைகளுக்கான தலைமை இயக்குநர் தெரிவித்தார்.

2025-26-ஆம் கல்வியாண்டிற்கான நீட் அல்லாத, இளங்கலை படிப்புகளுக்கான விண்ணப்ப தேதியை சென்டாக் அறிவித்துள்ளது.

ரேஷன் கடைகளில் விரைவில் கோதுமை வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------------